
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும். அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

**Translated from BS 874**

**பொருளடக்கம்**


2013–ஆம் ஆண்டிற்கான சட்ட வாக்கியம் ...... 2

பார்வையற்ற பர்திமேயு கண்டது என்ன ........... 5

நான் அபிஷேகம் பண்ணினவர்களைத் தொடாதிருங்கள் ..................... 9



BS Tamil Version - 20

2013

# என் உபதேசத்திலே நிலைத்திருங்கள்

CONTINUE IN MY WORD

## 2013-ம் ஆண்டின் சட்டவாக்கியம்

**“நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்: சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” யோவா. 8 : 31, 32.**

## சீஷத்துவத்திற்கான அழைப்பு

சீஷத்துவத்தைக் குறித்த இந்த பாடத்தை ஒரு கேள்வியோடு ஆரம்பிப்போம். கிறிஸ்துவினுடனான எனது பிரதிஷ்டையின் உறவு முறிக்கப்படக்கூடுமா? ஆம், அது முறிக்கப்படக்கூடும். நாம் நமது பங்கை செய்யாத பட்சத்தில் அது நிச்சயமாக முறிந்துபோகும். இவ்விஷயம் யோவா. 8 : 31, 32-ல் நமது ஆண்டவருடைய வார்த்தைகளில் தெளிவாக காட்டப் பட்டிருக்கிறது. “**இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால்** (அப்படி செய்தால் ‘மட்டுமே’), **மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்: சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.**” சீஷத்துவம் என்பது இயேசுவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுகொண்டு, மேலும், பிரதிஷ்டையின் வாயிலாக அவர் மூலமாய் மட்டுமே அடைய கூடிய மேலான சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் ஏற்று அதில் பிரவேசித்திருக்கிறவர்கள் என்று அவர் இங்கே கூறியிருக்கிறார் என்பதைக் கவனியுங்கள். சீஷத்துவம் என்று இங்கே காட்டப்பட்டிருப்பதானது நிபுணத்துவத்தைக் குறிக்கவில்லை. மாறாக, ஒருவன் சீஷன் என்று எப்பொழுது குறிப்பிடப்படுகிறானென்றால், ஒரு புது மாணவன் முழுமையாக எஜமானருடைய கட்டளைகளின் கீழ் மனதளவிலும், சன்மார்க்க ரீதியிலும், மத சம்பந்தமாகவும் கிறிஸ்துவால் முழுமையாக வளர்ந்து பூரண புருஷனாக வரும்போது சீஷனாகிறான்.




இந்த விஷயத்தில், உலக ஜனங்கள் கிறிஸ்துவின் பெயரை வைத்திருக்கிற அனைவரிடமும் பூரணத்துவத்தை எதிர்பார்த்து மாபெரும் தவறுக்குள்ளாகிறார்கள். சில கிறிஸ்தவர்களும் தேவனிடம் செய்யும் ஓர் முழு பிரதிஷ்டையின் மூலமாக நொடிப்பொழுதில் பூரணமாகிவிட முடியும் என்று வீணாக சிந்தித்து பெரும் தப்பெண்ணம் கொள்கிறார்கள். சிலர், தாங்கள் பாவம் இல்லாதவர்களாக இருக்கிறதாக கோருகின்றனர். (1 யோவா. 1 : 8-10). இவ்விதமாக பரிந்து பேசுகிற இரட்சகர் ஒருவர் (1 யோவா. 2 : 1, 2) தேவையில்லை என்றும், தங்கள் குறைபாடுகளை மூடும் அவரது புண்ணியமும் அவசியமில்லை என்பதாற்போல் ஓர் அனுமானத்தைக் கொடுக்கிறார்கள். நம்முடைய தேவன் நமக்கு சீஷத்துவத்திற்கு ஓர் வழியை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதினால் நாம் எவ்வளவு கிருபைபெற்றவர்களாயிருக்கிறோம். நம்முடைய சுயநீதியின் அழுக்கு கந்தையை மூடும் பொருட்டு கிறிஸ்துவினால் சாட்டப்பட்ட புண்ணியத்தின் மதிப்பை தம்முடைய பிரதிஷ்டைசெய்த ஜனங்களுக்கு முன்பாக கிருபையாய் ஏற்படுத்தி வைத்திருக்கிறார். (ஏசா. 64 : 6). மேலும், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தைத் தரித்துக் கொள்ளும்படியான கனத்தை நமக்கு முன்பாக வைத்திருக்கிறார். (ஏசா. 61 : 10). தேவனிடத்திலிருந்து வருகிற இந்த கிருபையானது, “**தேவ சமாதானத்தையும்**” தேவனோடு சமாதானத்தையும், தேவ தயவையும் இன்றைய பிரதிஷ்டையாளர்கள் பெற அனுமதிக்கிறது.

பாவிகளைக் குறித்த தேவனுடைய வார்த்தையை நம்புவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் போதிய காரணங்கள் நமக்கு இருக்கின்றன. அவர்கள் சீஷத்துவத்திற்கு அழைக்கப்படவில்லை, மாறாக அவர்கள் மனந்திரும்பி தங்கள் பாவங்கள் மன்னிப்படையும்படியாக (நீதிமானாகும் படியாக) மீட்பரை விசுவாசிக்கவுமே அழைக்கப்படுகிறார்கள். எனினும், அவர்கள் நீதிமான்களாக்கப்பட்ட மனுஷர்களாக, ஆண்டவருக்கு முழு பிரதிஷ்டை செய்து அதன் மூலமாக கிறிஸ்துவின் பாடசாலையில் மாணாக்கர்களாக அவருடைய சீஷர்களாக மாற வேண்டும் என்பதே இவை அனைத்தின் நோக்கமாகும். கிறிஸ்துவின் பாடசாலையானது யேகோவாவிடமிருந்துவரும் அவருடைய தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கான மற்றொரு சிலாக்கியமாகும். கிறிஸ்துவின் பாடசாலையில் பிரவேசிப்பதற்கு (பிதாவாகிய ஆதாமினால் நாம் இழந்த) உடன்படிக்கையின் உறவில் மறுபடியும் அவரோடு இணைவதற்கு நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகளை பரலோக பிதா அழைக்கிறார். அவர் நம்மிடத்தில் சேருவார் என்ற நிச்சயத்தோடுகூட கிறிஸ்துவின் மூலமாக அவரிடம் சேரவும், அவர் அழைக்கிறார். (யாக். 4 : 8), நாம் அவரிலும், அவர் நம்மிலும் நிலைத்திருப்பதற்கும் (1 யோவா. 4 : 13-16), நிச்சயமாக நமது “**ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருப்பதற்கும் அழைக்கிறார்.**” (1 யோவா. 1 : 3).

இந்த கிறிஸ்துவின் பாடசாலையானது பயபக்தியினாலும் அன்பினாலும் நிர்வாகிக்கப்படுகிற சுயத்தை வெறுத்தலின் பாடசாலை என்றும் சுய பலியின் பாடசாலை எனவும் கருதலாம். இந்த பாடசாலையின் மாபெரும் ஆசிரியரான நமது ஆண்டவராகிய இயேசு, தம்முடைய “சகோதரர்களாக” ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவர்களுக்கு போதிக்கும்படியாக பிதாவினால் நியமிக்கப்பட்டிருக்கிறார். நமதாண்டவராகிய இயேசு பிதாவின் கண்காணிப்பு மற்றும் அவரது வழிநடத்தலின் கீழ் இதே பாடசாலையில் பயின்றவராவார் - “**அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம்** (அழைக்கப்பட்ட உன்னத நிலைக்கு தகுந்தபடி) **பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணரானார்**” (எபி. 5 : 8, 9). இந்த விழுந்துபோன சந்ததியை சேர்ந்த நம்மை அவர் மீட்பதற்கும் உயர்த்துவதற்கும் வந்தார்.


**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

ஆனால், நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டு அவருடைய இராஜ்யத்தில் ஓர் பங்கை பெறும்படியாக அழைக்கப் பட்டிருக்கிறோம். நமது ஜீவியங்களை நாம் அவருக்கு பிரதிஷ்டை செய்துள்ளதால், பிதாவானவர் இருதயப்பூர்வமாக அங்கீகரிக்கக் கூடிய கிறிஸ்துவின் ஆவியை நாம் முழுவதும் வளர்த்துக் கொள்ளும்படியாக, தம்முடைய ஆயிர வருஷ குமாரர்களாகும் படி (ஏசா. 60 : 4) அழைக்கப்பட்ட யாவரும் இந்த பாடசாலையில் போதனையையும் ஒழுக்கப்பயிற்சியையும் பெற வேண்டும்.

இவற்றிலிருந்து நாம் காண்கிறதென்னவெனில், விசுவாசத்தின் மூலமாகவும், பிரதிஷ்டையின் மூலமாகவும் ஆண்டவரோடு ஐக்கியம் வைத்திருப்பதினால், நாங்கள் கற்றுத்தேர்ந்தவர்கள் என்றோ சுதந்திரவாளிகள் என்றோ எங்களையே நாங்கள் கூறவில்லை. மாறாக, அவர் மீது அன்பு செலுத்துகிறவர்களுக்காக தேவன் ஒதுக்கிவைத்திருக்கிற காரியங்களை சுதந்தரித்துக்கொள்ள ஆயத்தமாவதற்கு விருப்ப முள்ள மாணவர்களென்றும் சீஷர்களென்றும் எங்களைக் கூறிக் கொள்கிறோம். (1 கொரி. 2 : 9). நம்முடைய மாம்சமானது பூரணமாயிராத காரணத்தினால் நாம் விரும்பாததை தவிர்க்க முடியாத காரணத்தினால் நாம் அவற்றை செய்தும், நாம் செய்ய விரும்பியவற்றை செய்யாமல் விடுகிறதாய் நாம் காண்கிறபோது, இந்த பாடம் சம்பந்தமான தேவ போதனையை நாம் மனதில் வைத்திருப்போமானால் நம்மை அது அதைரியப்படுவதிலிருந்து தடுத்து உதவி புரியும். (ரோம. 7 : 14-25).

மேலும் நாம் ஞாபகம் வைக்க வேண்டியது என்ன வெனில், இராஜ்யத்தின் ஆயத்தங்களிலும், அவருடைய போத னையின் கீழும், கிறிஸ்துவின் பாடசாலையிலும் பிரவேசித்தது மாம்சம் அல்ல, மாறாக, நம்மில் விருத்தியடைந்தும், ஸ்திரப்பட்டும், பலப்பட்டும், சீர்படுத்தப்பட்டும், பூரணப்பட்டும் வருகிற (1 பேது. 5 : 10) புது இருதயமும், புது மனமுமாகும்; மேலும் தேவனுடைய அன்பானது நமக்குள் பூரணப்பட வேண்டும். (1 யோவா. 2 : 5; 4 : 12). சபைக்கு அப்போஸ்தலன் கூறுகை யில் இவ்வாறாக விவரிக்கிறார், "**நாம் இனிப் பாவத்திற்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.**" (ரோம. 6 : 6). பிரதிஷ் டையில் மனுஷீக சித்தமானது அந்தக்ஷணமே மரணத்திற்குட் படுத்தப்படுகிறது. "**தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக் கொப்பாய்** (கிறிஸ்துவின் பாடசாலையில்) **அறிவடையும்படி**" புதுப்பிக்கப்படுவது உள்ளான மனுஷனே. (கொலோ. 2 : 11; 3 : 9, 10). கிறிஸ்துவின் பாடசாலையில் பூரணப்பட்டு ஸ்தரப்பட வேண்டியது "**இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே**" ஆகும். (1 பேது. 3 : 4).

நம்முடைய ஜீவியத்தை நாம் நமது ஆண்டவருக்கு பிரதிஷ்டை செய்திருப்பதால், நாம் இருளில் இடறாமல் வெளிச்சத்தில் நடக்கிறோம். தெய்வீக ஒழுங்கிற்கு இசைவாக புரிந்துகொண்டு அதற்கேற்ற பிரகாரமாய் நடக்கிறோம். அவருடைய கிருபையான வார்த்தைகளில் அவர் காண்பிக் கிறவற்றை அவர் பார்க்கிற விதமாகவே நாமும் பார்க்கிறோம். எனினும், இந்த வெளிச்சமாகிய அன்பு, நீடிய பொறுமை மற்றும் சகோதர சிநேகம் போன்றவற்றை கர்த்தருடைய பிரதிஷ்டையின் ஜனங்கள் பார்க்கும் பிரகாரமாக உலகப்பிரகாரமான சிந்தை யுடையவர்கள் பார்க்க விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கத் தேவையில்லை. மாறாக, நம்முடைய எதிராளியானவன் கிறிஸ்துவின் பாடசாலையின் சட்டதிட்டங்களை தவறாகக் காண்பிக்க தொடர்ந்து நாடுகிறான். அவன், உலகத் தாரிடமும் மாய்மாலமான பேர்வளிகளான பேராசிரியர்களிடம் மட்டுமல்ல, குறிப்பாக உண்மையான சீஷர்களிடம்கூட புதிய மனம், புதிய ஆவியின் பிரகாரமாக அல்லாமல் மாம்சத்துக்குரிய விதமாய் அவர்கள் முடிவெடுக்கும்படி செய்து, தேவனுடைய வார்த்தைக்கு மாறாக அவர்களை நம்ப செய்து அதைரியப்படுத்தி சரியான வழியிலிருந்து திருப்புகிறதற்கு விருப்பமுள்ளவனாக இருக்கிறான்.

இந்த கிறிஸ்துவின் பாடசாலையில் தங்களது ஓட்டத்தை முடித்து, தேறியவர்களாக, அவர்களது ஆண்டவருடைய இராஜ்யத்தில் பங்குள்ளவர்களாக மாறி, பூமியின் வம்சங்களை யெல்லாம் ஆசீர்வதிப்பதிலும் போதிப்பதிலும் உதவி செய்பவர் களாக மாறுபவர்கள் எவர்களோ, அவர்கள் நிச்சயமாக "உத்தம சீஷராவார்கள்." ஆனால் இந்த பாடசாலையில் சேர்ந்ததால் மட்டுமே இதினுடைய பலன்கள் யாவையும் கொண்டுவந்து விடாது; நமது ஆண்டவர் சொல்கிற வண்ணமாக, இந்த பாடசாலையில் நிலைத்திருந்தால் மட்டுமே, அவருடைய வழிநடத்தல்களின் கீழும், அவருடைய சத்திய வார்த்தையின்மேல் விசுவாசமுள்ளவர்களாகவும் நிலைத்திருந்தால் மட்டுமே இந்த பாடசாலையின் மேலான காரியத்தை அடைய முடியும். ஆயினும், நமது பிரயாணத்தின் ஒவ்வொரு படியிலும் நாம் வளர்ந்துவரும் வளர்ச்சியை காண்பதென்பது நாம் பெற்ற சிலாக்கியமாகும். நாம் சத்தியத்தைக் குறித்து மென்மேலும் அறிய அறிய அது நம்மை மென்மேலும் விடுதலையாக்கும் என்பதைக் காணமுடிகிறது சிலாக்கியமே. நாம் சட்டென்ற அறிவு பெருக்கத்தையும், உடனடியான விடுதலையையும் எதிர்பார்க்கக் கூடாது.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு தம்முடைய உத்தியோகங்களில் ஒன்றான பரிசுத்தமாக்குகிற வேலையை, தமது வாக்குத்தத்தங்களின் மூலமாகவும் மற்றபிற வேதாகம பகுதிகளின் மூலமாகவும் தற்காலிகமாக நீதிமான்களாக்கப்பட்ட நபர்களுடைய இருதயங்களை பிரதிஷ்டைக்கு கொண்டுவந்து, அவர்கள் அந்த பிரதிஷ்டையை நிறைவேற்றும்படி உதவுகிறார். மேலும், சத்திய வார்த்தைகளின் கூடுதலான அம்சங்களினால் அவர்களை போதித்து, அவர்கள் புத்தியாய் பிரதிஷ்டை செய்து அதனை நிறைவேற்ற போதிய அறிவைக் (புரிந்து கொள்ளு தலைக்) கொடுத்து, அவர்களுடைய மனங்களிலும் கிரியை செய்கிறார். பரிசுத்தமாகுதல் "***சத்திய வசனத்தினாலே***" வருகிறது (யோவா. 17 : 17; 1 கொரி. 4 : 15; யாக். 1 : 18; 1 பேது. 1 : 23). பரிசுத்தமாகுதலானது பிரதிஷ்டையின் ஓட்டம் முழுவதிலும் தினந்தோறும் தொடர்கிறது. தேவனுடைய நல்வசனத்தைத் தொடர்ந்து ருசிப்பதால், ஒருவன் காலங்களையும், சமயங்களை யும் மற்றும் பல்வேறு சத்திய அம்சங்களையும் அறியும்படி போதிக்கப்பட்டிருக்கிறான். (1 தெச. 5 : 1; 2 பேது. 1 : 12), மேலும் எவ்விதம் தேவனுக்கு பிரியமானபடி ஊழியம் செய்ய வேண்டுமென்பதைக் குறித்தும், கிறிஸ்துவின் சாயலில் வளர்வது எப்படி என்பதைக் குறித்தும் கற்றுக் கொள்கிறான்.

கீழ்க்கண்ட தேவனுடைய வசனத்தை கவனமாக வாசித்து கவனியுங்கள்: "**நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே** (உங்களைக் குறித்த) **தேவனுடைய சித்தமாயிருக்கிறது**" (1 தெச. 4 : 3); அவரை "**ஆவியோடும் உண்மையோடும்**" தொழுதுகொண்டு அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும். (யோவா. 4 : 23, 24). "**கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின**" (யோவா. 1 : 17); நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர வேண்டும் (2 பேது. 1 : 5-11; 3 : 18). அப்போஸ்தலர் பவுல் இருதயத்தையும் தலையையும் சேர்த்து 1 தீமோ. 4 : 16-ல் கூறுகிறதாவது: "**உன்னைக் குறித்தும்**

**உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு**" என்கிறார். மேலும் 2 தீமோ. 3 : 16, 17-ல் மறுபடியும் அவர் கூறுகிறதாவது: "**வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும்** [தப்பறையை (கடிந்து) எதிர்ப்பதிலும்; இந்த முதல் இரண்டும் தலை சார்ந்ததாகும்], **சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும்** [இந்த கடைசி இரண்டும் இருதயம் மற்றும் அதின் பண்புகளும், முடிவான குணத்தை சார்ந்தது ஆகும் E. Vol-8, பக்கம் 81 பார்க்கவும்] **பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.**" சத்தியமும் சத்திய ஆவியும், சத்தியமும் நீதியும் ஆகிய இவைகள் இன்னும் அநேக வேத வாக்கியங்களில் இணைத்து சொல்லப்பட்டிருக்கின்றன.

பின்னர், பரிசுத்த ஆவியில் பங்கெடுக்கிறவர்கள் தங்கள் பரிசுத்தமாகுதலில் தொடர்ந்து நிலைத்து அதனை நிறைவேற்றினார்களானால், ஓர் குறிப்பிட்ட அளவில் "ஆழமான தேவனுடைய காரியங்கள்" (1 கொரி. 2 : 10) அடங்கிய தேவனுடைய நல்வார்த்தையை பாதுகாக்கிறதில் பங்குள்ளவர்களாயிருப்பார்கள் என நாம் பார்க்கிறோம். ஒருவன் தான் பெற்ற முதல் வெளிச்சத்தில் அடைந்த மனந்திரும்புதல் மற்றும் தற்காலிகமாக நீதிமானாகுதலின் நிலையில் நின்றுபோனால், அவனுடைய பரிசுத்தமாகுதலானது நிறைவேற்றப்படாமல் போகும். இயேசுவினுடைய உத்தமமான சீஷர்களாயிருக்க வேண்டுமானால், அவருடைய அனைத்து சீஷர்களும் கண்டிப்பாக அவருடைய வார்த்தையில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும்; பரிசுத்தமாகுதலுக்கு தேவையான குறைந்தபட்ச அளவிலாவது சத்தியத்தின் அறிவில் நிலைத்திருந்திருக்க வேண்டும். (யோவா. 8 : 31, 32). அதன்பின், அவர் தமது ஆவியின் மூலமாக நமக்கு போதிப்பதின் பிரகாரமாக அவருடைய வசனத்தின் வெளிச்சத்தில் நடக்கிறவர்களாய் இருக்க வேண்டும். (எபே. 5 : 8, 14; 1 பேது. 2 : 9) P'45 pp. 2-6.. பிரதிஷ்டைக்கு பின்பதாக, காலம் செல்லச் செல்ல நாம் அறிவிலும், புத்தியிலும் கிருபையிலும் வளர்கிறவர்களாய் இருக்க வேண்டும். (லூக். 24 : 45; 1 கொரி. 14 : 20; எபே. 1 : 17, 18; 2 தீமோ. 2 : 7; 2 பேது. 1 : 5-11; 3 : 18; 1 யோவா. 5 : 20).

நம்முடைய ஆண்டவருடைய வாக்குத்தத்தங்கள் தொடர்ந்து வருகிறது; "**நான் உங்களுக்கு சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது**" (யோவா. 6 : 63, 68) என்கிறார். புதிய இருதயமும், புதிய மனமும், புதிய சித்தமும் ஜீவனை பெற வேண்டுமானால் அவைகள் ஜீவ வசனங்களை கவனித்து காத்துக்கொள்ள வேண்டும். (சங். 119 : 93; மத். 4 : 4). "**செம்மையாய் நடக்கிறவனுக்கு என் வார்த்தைகள் நன்மை செய்யாதோ?**" (மீகா 2 : 7; சங். 119 : 105; 2 பேது. 1 : 18, 19; 1 யோவா. 1 : 7). உண்மையாய் பிரதிஷ்டை செய்த ஜனங்கள் ஆவியினால் கொடுக்கப்பட்ட "சத்திய வசனத்தை" (யாக். 1 : 18) அசட்டை செய்துவிட்டு அதன்பின், தேவனே எங்களுக்கு ஆவியை தாரும் என்று ஜெபிப்பது முற்றிலுமாய் பிரயோஜனமற்றதாகயிருக்கும். பரிசுத்தமாகுதலானது சத்தியத்தின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாக ஆவியினால் ஏற்படுவதாகும்.


நாம் மேலும் மேலும் "தேவனுடைய நல்வார்த்தையில்" பங்கெடுக்கும்போது, அவை "தேனைப் போல தித்திப்பாய்" இருக்கிறதாகக் காணப்படுகிறது. அதனை மேலும் புசிக்கையில் மேன்மேலும் மதுரமாயிருக்கிறது. எனினும், அதின் பின்விளைவுகள் எப்பொழுதும் சற்றேறக்குறைய இனிப்போடேக்கூடிய கசப்பான உபத்திரவமாயும் கலந்து இருக்கிறது. (எசே. 3 : 1-3; எரே. 15 : 16; வெளி. 10 : 2, 8-10).

தேவனுடைய நற்குணமானது ஞானத்திலும் அன்பிலும் தொடர்கிறது. நீதி. 8 : 17-ல் அவர் நம்மோடே பேசுகிறதாவது, "**என்னைச் சநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்: அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்.**" ஆம், ஞானமானது, அன்பு கூருகிறது. அதனை நேசித்து கருத்தாய் தேடுபவர்களுக்கு பலனளிக்கிறது. அது ஓர் அன்பின் வெளிப்பாடாக அதின் ஊற்றாகிய நம்முடைய யேகோவாவிடமிருந்தும், தேவனுடைய ஸ்தானத்திலிருந்து, கிரியை செய்கிற நம்முடைய நல்ல மேய்ப்பனாகிய நமது ஆண்டவராகிய இயேசுவிடமிருந்தும் நம்மை புல்லுள்ள இடங்களுக்கும், அமர்ந்த தண்ணீர்களண்டைக்கும் கொண்டு போய் விடுகிறார். பிதா மற்றும் இயேசுவின் ஆழ்ந்த அன்பானது குறிப்பாக இவர்கள் இருவர் மீதும் கடமை அன்பையும் தன்னலமற்ற அன்பையும் செலுத்துகிறவர்கள் மீது வெளிப்படும். அவர்கள் சத்தியத்தையும் அதின் ஆவியையும் தேடி அப்பியாசிக்கும் அளவுக்குத்தக்கதாக தேவஅன்பு அவர்களை சென்றடையும். இயேசுவை உண்மையுடனும் முழு இருதயத்துடனும் அன்பு கூருகிறவர்கள் யாவரும் அவரால் விசேஷித்த தனித்துவமான அன்பினால் சிநேகிக்கப்படுகிறார்கள். வசனத்தினாலும், ஆவியினாலும், தேவனுடைய பராமரிப்பினாலும் இயேசுவானவர் அவர்களிடம் தம்மை அன்பாக வெளிப்படுத்தி, அவர் சொன்னது போல (யோவா. 14 : 21-23) அவரும் பிதாவும் அவர்களோடே வாசம் பண்ணுவார்கள். "**என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளை கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்: நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் ........ அவனில் என் பிதா அன்பாயிருப்பார்: நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்.**" ஆ! இது நமக்கு எப்பேற்பட்ட சந்தோஷத்தை கொடுக்கிறது!

நாம் தெய்வீக ஞானத்தை உண்மையாய் விரும்புகிறவர்களாயிருந்தால், அதனை ஆவலுடனும், சுறுசுறுப்புடனும், அதிஜாக்கிறதையாய் சிரமமெடுத்து ஜெபத்துடன் தேடுவோமானால், நாம் நிச்சயமாக அதனைக் கண்டடைவோம். "**கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்: தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்: தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.**" (மத். 7 : 7-11) என்று நம்முடைய ஆண்டவர் நமக்கு உறுதியளித்திருக்கிறார். மேலும் வெளி. 3 : 20-ல் "**இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்: ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்**" என்கிறார். எத்தகைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்!

அநேகர் ஆண்டவரை தேடி, தங்கள் ஜீவியத்தின் ஆரம்பகாலத்திலேயே அவரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் (அப். 17 : 27). சிலர் தங்கள் ஜீவியங்களை தங்களது இளம் வயதிலேயே அவருக்கு பிரதிஷ்டை செய்கிறார்கள். "**நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை**" (பிர. 12 : 1) என்று நம்முடைய வேதாகமம் கூறுகிறது. ஒருவனுடைய ஆரம்ப வருடங்களிலேயே (இளம் வயதிலேயே) ஆண்டவரை தேடி, அவரைக் கண்டடைவதால் அநேக பலன்களை அடைய முடியும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் ஜெப வேளைகளின் ஐக்கியத்திலும், கூட்டுறவிலும், துதித்தலிலும், கூடுமானால் தினந்தோறும் பங்கெடுக்க வேண்டும். மேலும், பிள்ளைகள்

நடக்க வேண்டிய வழியில் அவர்களை மிக கவனமாகவும் ஞானமாகவும் பழக்க வேண்டும். (நீதி. 22 : 6; எபே. 6 : 4-ஐ; ஆதி. 18 : 19-வுடன் ஒத்துப் பார்க்க). சிறு வயதிற்கு ஓர் விசேஷம் உண்டு – அதின் கபடற்ற தன்மையும், அதின் விசுவாசமும், கற்றுக் கொள்வதிலும் பிரியப்படுத்துவதிலும் ஆர்வமும் மிகுதியாயிருக்கிறது. சிறு பிள்ளையின் மனமானது சத்தியத் திற்கும் அதின் ஆவிக்கும் பொதுவாக அதிகமாய் இடமளிக்கிறதாக இருக்கிறது. ஆகையால் இது, விசுவாசத்தினால் நீதிமா னாகுதலுக்கும், தேவனுக்கு பிரதிஷ்டை செய்வதிலும், காலத்திற்கேற்ற சத்தியத்தை புரிந்து கொள்வதற்கும் வழிநடத்துகிறது. நன்மையானவற்றை கொடுக்கிறவராகிய தேவன் மீது அன்பு செலுத்தும்படி நம்முடைய சிறுபிள்ளைகளானவர்கள் அவருடைய சித்தத்தை சிந்தித்து, தங்களுடைய சிறிதான அனைவற்றையும் அவருக்கு பிரதிஷ்டை செய்யும்படியாக சிறிவயது முதலே கற்பிக்கப் பட்டால், அது அவர்களுக்கு எவ்வளவு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்! அப்படிப்பட்ட பிள்ளைகள், நன்றாக போதிக்கப்பட்டி ருக்கிறபடியால் அவ்வப்போது தங்களுடைய பெற்றோர்களுக்கே போதிக்கக்கூடியவர்களாக இருந்து, உண்மையான பயபக்தியின் ஆவியை காட்டுகிறார்கள். சில நேரங்களில் இது சொல்லர்த்தமாகவே கூட உண்மையாகத்தான் இருக்கிறது. "**குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும்**" தேவனுடைய நாமத்திற்கு துதி உண்டாகும்படி அவர் செய்கிறார். (சங். 8 : 2; மத். 21 : 16). மேலே சொல்லப்பட்டவைகள் சம்பந்தமாக சிறுபிள்ளைகளைப் போல் போதிக்கப்படத்தக் கவர்களாக நாம் மாறாவிட்டால் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க மாட்டோம். (மத். 18 : 2-4; 19 : 14; மாற். 10 : 13-16; லூக். 18 : 15-17). இளம்பிராயத்திலேயே தேவனை தேடி, அவருக்கு அர்பணிக்கப்பட்டிருக்கிற அன்பின் இளம் இருதயங்கள் நிச்சயமாக ஆசீர்வாதத்தை கண்டடையும். மேலும், விசேஷமாக தற்காலத்தில், இந்த உலகத்தை சூழ்ந்திருக்கிற தீமையிலிருந்தும் ஓர் பாதுகாவலையும் இளம் இருதயங்கள் கண்டடையும்!



தேவனுடைய நல்வார்த்தை
நமதாண்டவரின் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்
ஒருவன்: கேட்டால்–அது அவனுக்கு கொடுக்கப்படும்; தேடுங்கள்– நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள்–கதவு திறக்கப்படும்.
மத். 7 : 7–11.

என்றாலும், (அதிகாலையில் [இளமையில்] என்னைத் தேடுபவர்கள் என்னைக் கண்டடைவார்கள்) என்ற நீதி. 8 : 17-ஆம் வசனமானது இளம் பிராயத்தினருக்கு மட்டுமே பொருந்தும் என நாம் எண்ணிவிடக் கூடாது. நாம் அனைவரும் (பெரியவர்களும் சிறுவர்களும்) நம்முடைய அன்பின் பரலோக பிதாவிடமிருந்தும், நமது விலையேறப்பெற்ற ஆண்டவராகிய இயேசுவிடமிருந்தும் வருகிற தெய்வீக ஞானத்தை, தேவைப்படுகிற ஒவ் வொரு வேளையிலும் அதிசீக்கிரமாக முதன் மையானதாக மனப்பூர்வமாய் ஆர்வத்துடன் தேட வேண்டும். நிச்சயமாகவே நாம் கீழ்கண்ட படி இவ்விதமாகக் கூற இயலும். *"நம்முடைய எல்லா பாவங்களையும் துக்கங்களையும் சுமக்கும் ஏப்பேற்பட்ட நண்பர் இயேசு நமக்கிருக்கிறார். எல்லாவற்றையும் ஜெபத்தில் அவரிடம் கொண்டு செல்ல எப்பேற்பட்ட சிலாக்கியம் நமக்கிருக்கிறது!"* இந்த அழகிய பாடலின் மீதி வரிகளை ஆயிரவருட அருணோதய கீதங்களின் 321 ஆம் பாடலில் கவனித்து வாசிக்கவும். ***

# பார்வையற்ற பர்திமேயு கண்டது என்ன

**(மாற். 10 : 46–52)**

*"அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப் போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்."* - *(ஏசா. 35 : 5, 6).*

அது ஒரு பஸ்கா காலமாயிருந்தபடியால், அநேகர் எருசலேமை நோக்கி இயேசுவுடனே கூட ஒரே திசையில் பிரயா ணம் பண்ணிகொண்டிருந்தார்கள். அப்பொழுது, பர்திமேயு என்கிற குருடான பிச்சைக்காரன் அவ்வழியில் போகிறவர் களிடமிருந்து பிச்சை கிடைக்குமென உட்கார்ந்திருந்தான். இயேசு அவ்வழியாக கடந்து போகையில் ஓர் எதிர்பாராத பவனி போன்ற கூட்டம் ஏற்பட்டதால், அதின் காரணத்தை பர்திமேயு வினாவினான். அப்பொழுது நசரேயனாகிய இயேசு கடந்து செல்கிறார் என்று அவனுக்கு சொல்லப்பட்டது.

இயேசுவானவர் உன்னதமான மேசியா என்றும், அவர் வேதவாக்கியங்களின்படி முடிவாக பாவத்தையும், துன்பத்தை யும், கஷ்டத்தையும் மொத்த உலகத்திலிருந்தும் நீக்கி போட்டு படிப்படியாக உலகத்தை ஆசீர்வதிப்பார் என்று பர்திமேயு கேள்விப்பட்டிருந்தான். மேலும், இயேசு குணமாக்குகிறார் என்றும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சுகமளிக்கிறார் என்றும், பிசாசுகளை துரத்துகிறார் என்றும், குருடர்களுக்கு பார்வை யளிக்கிறார் என்பதையும் அவன் ஏற்கனவே கேள்விப் பட்டிருந்தான். அவன் எண்ணியதென்னவெனில்: அவர் கடந்து செல்கிறார் என்பதை ஏன் ஒருவர் கூட எனக்கு தெரிவிக்கவில்லை! அவர் மற்றவர்களை குணமாக்கி இருக்கிறார் என்றால், ஏன் அவரிடம் குணம் பெற்றவர்களில் ஒருவனாக நான் இருக்க கூடாது?

அவனுடைய விசுவாசமும் நம்பிக்கையும் கொழுந்து விட்டு எரிந்தது. "**இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்**" என்று சத்தமிட்டான். அமைதலாயிரு! சத்தம்போடாதே! மகா போதகரை தொந்தரவு செய்யாதே; அவர் மற்றவர்களுடனே பேசிகொண்டிருக்கிறார் என்று அருகிலிருந்தவர்கள் சொன்னார் கள். ஆனால் பர்திமேயு, இந்த பொழுதை விட்டால் இனி அவரைப் பிடிக்க முடியாதென எண்ணி, முந்திய பொழுதைவிட மேலும் அதிகமாய் ஜனக்கூட்டத்தாருக்கு மேல் தன் சத்தத்தை உயர்த்தி "**இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்!**" என சத்தமிட்டான்.

இயேசு தம்மை அழைக்கிறவர்களுக்கு இரங்கும்படியாக எப்பொழுதும் ஆயத்தமுள்ளவரானபடியால், அவர் அந்த சத்தத்தைக் கேட்டபொழுது, அந்த குருடரான மனுஷனை தம்மிடம் அழைத்தார். இது அவனுடைய விசுவாசத்தைக் காண பிக்கக் கூடியதாக இருக்கிறது. இது அந்த ஜனக்கூட்டத்திற்கு ஓர் மிக முக்கியமான பாடமாக அமைந்தது. மற்றவர்களுடைய உதவியுடன் பர்திமேயு இறுதியாக இயேசுவின் அருகில் கொண்டுவரப்பட்டான். பின்னர் எஜமானர் அவனை நோக்கி,

“**நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய்?**” என்றார். அவர் சொல்லிய மாத்திரத்தில், “**ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்**” என்றான். இயேசு அவனை நோக்கி, “**நீ போகலாம், உன்விசுவாசம் உன்னை இரட்சித்தது**” என்றார். அவன் உடனே பார்வையடைந்தவனாய் தேவ வல்லமையை துதிபாடும்படி, இயேசுவே மேசியா என்று சொல்லி அந்த பவனியில் பின் செல்கிறவர்களில் ஒருவனானான்.

## “இயேசுவே, தாவீதின் குமாரனே”

“**இயேசுவே, தாவீதின் குமாரனே**” என்ற பார்வையற்ற மனுஷனுடைய வார்த்தைகளானது, தற்காலத்தைப் பொறுத்த வரை அநேகரால் முக்கியத்துவம் இல்லாததாக காணப்பட்டாலும், அவ்வார்த்தைகள் அவனுக்கும், அவனுடைய நாட்களில் வாழ்ந்த யூதர்களுக்கும் அது விசேஷித்த முக்கியத்துவம் வாய்ந்ததா யிருந்தது. மேசியாவானவர் மகா பிரதான ஆசாரியராய் ஆரோனின் மூலமாய் முன்னடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார் என்பதை யூதர்கள் அறிந்திருந்தார்கள். மேலும், பிரமாணத்தைக் கொடுக்கிறவராக மோசேயின் மூலமாய் முன்னடையாளப் படுத்தப்பட்டிருக்கிறாரென்றும், உன்னதமான இராஜாவாக செல்வமும், செல்வாக்குமுள்ள, தாவீதின் ஞானமுள்ள குமார னும், அவனுடைய இராஜ்யத்தின் வாரிசுமாகிய சாலமோனால் முன்னடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார் என்பதை அறிவார்கள். இந்த தீர்க்கதரிசனங்களை ஒட்டுமொத்தமாய் இணைத்து பார்த்தால், தனது சிங்காசனத்தில் ஆசாரியராகவும், இராஜா வாகவும் வீற்றிருந்த மெல்கிசேதேக்கை அடையாளப்படுத்துகிறது என்பதை காணலாம். அதாவது அவர் தேவனுடைய ஆசாரியராக வும் இருந்ததோடுமட்டுமல்லாமல், அதே சமயத்தில் அவர் இராஜாவாகவும் இருந்து இரண்டு உத்தியோகங்களை உடைய வராயிருந்தார்.


இது சம்பந்தமாக பரி. பவுல் சொல்லுவதென்ன வெனில், இயேசுவானவர் ஆரோனுடைய முறைமையின்படி வெறுமனே ஆசாரியராய் மாத்திரம் இருக்கவில்லை – அதாவது அரசாளாமல் வெறும் பலியிடுகிற ஆசாரியராய் மாத்திரம் இருக்கவில்லை, மாறாக, அவர் மெல்கிசேதேக்கின் முறைமை யின்படியான ஆசாரியராய் இருக்கிறார் என்று கூறுகிறார். இந்த காரியத்தை குறித்து பரி. பவுல் தாவீதின் சங்கீதங்களில் சொல்லப்பட்டிருக்கிற கர்த்தருடைய ஆணையை இவ்வாறாகக் கூறுகிறார். “**நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென் றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்: மனம் மாறாமலுமிருப்பார்**” (சங். 110 : 4). பரி. பவுல் இந்த தீர்க்கதரிசன வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு மிக முக்கியமான விஷயங்களைத் தெரிவிக்கிறார். இயேசுவைக் குறித்தும், மேசியாவின் இராஜ்யத் தையும் குறித்த தெய்வீக விருப்பத்தையும், அவைகளுடைய காரியாம்சத்தையும் பவுல் காண்பிக்கிறார்.

அவருடைய முதலாம் வருகையில் இயேசுவானவர் செய்த அற்புதங்கள் யாவும் அவர் தமது இரண்டாம் வருகையின் போது நிறைவேற்றப் போகிற விசேஷ அற்புதங்களுக்கும் கிரியைகளுக்கும் முன்னடையாளமாய் இருக்கின்றன. இது போலவே ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற வேத வாக்கியமும் மேசியாவின் இராஜ்யத்தைப் பற்றியது. இயேசுவானவர் செய்த அனைத்து அற்புதங்களும், பின்னர், குறித்த காலத்தில் அவருடைய ஆயிர வருஷ யுக இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது நிறைவேறகூடிய மாபெரும் வேலை களுக்கு முன்னடையாளமாகவும், உதாரணங்களாகவும் இருக்கின்றன என்பதை அப்போஸ்தலர்களுடைய போதனை களின் பொதுவான விளக்கமுறைகள் கூறின. “**இவ்விதமாக இயேசு இந்த அற்புதங்களை ............... செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்**” என வாசிக்கையில், இந்த வசனமானது, அவருடைய இராஜ்யத்தின் வல்லமையையும் மகிமையையும் முன்பதாகவே வெளிப்படுத்துகிறதைக் காண்கிறோம்.

இயேசுவும் அவருடைய சீஷர்களும் பாலஸ்தீனத்தி லுள்ள அனைத்து நோயாளிகளையும் குணமாக்கும்படி நாடினார்கள் என நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக, திரளான நோய்வாய்ப்பட்டவர்கள் இருக்கையில் அவர்கள் மத்தியில் குணமாக்கப்பட்டவர்கள் விதிவிலக்கானவர்களாய் விசேஷமான விசுவாசத்தை காண்பித்தனர். இந்த சம்பவத்தில், பர்திமேயு என்பவன் வழியோரங்களில் அமர்ந்திருந்து பிச்சை கேட்கும் குருடர்களில் ஒருவனாவான். பாலஸ்தீனம், சிரியா மற்றும் எகிப்து தேசங்களில் குருடரான பிச்சைகாரர்கள் அதிகமாய் காணப் படுகிறார்கள் என நாம் நிச்சயமாக சொல்லலாம். நம்முடைய ஆண்டவர் பர்திமேயுவை கடந்து செல்லும்போது, அவனை குணமாக்கும்படியான எண்ணம் உடையவராகவுமில்லை, அவன் மீது கவனம் செலுத்தவுமில்லை. அவனுடைய கண்பார்வை யானது சரிசெய்யப்பட்டதற்கு காரணம் அவனுடைய விசுவாசமே. ஏனெனில், அவருடைய சத்தத்திற்கு செவிக்கொடுக்கிறவர் களையும், அவருடைய விசுவாசத்திற்குள் திரும்புகிறவர்களையும், அவர் கவனியாதிருப்பாரோ என்று கருதியதால் அவன் உரக்க சத்தமிட்டான்.

## குருட்டுத்தன்மையின் மோசமான நிலை

இதே போன்ற சம்பவமானது பெதஸ்தா குளத்தில் நிகழ்ந்ததை நாம் நினைவு கூருகிறோம். குணமடையும்படியாக திரளானவர்கள் அந்த குளத்தின் வாசலருகே, தண்ணீர் கலக்கப்படும் நேரத்திற்காக அங்கேயே காத்துக்கிடந்தனர். அவ்விதம் காத்திருந்தவர்களில் ஒருவனிடம் மாத்திரம் இயேசு, “**உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட**” என்றார். இயேசுவினுடைய அற்புதங்கள் யாவும் அவருடைய மேசியாவின் இராஜ்யத்தின்போது வரவிருக்கிற ஆசீர்வாதங்களைக் குறிக்கிறதென்பதை நாம் புரிந்துகொள்கிறபோது,



**பர்திமேயு பார்வையடைந்தான் – மாற். 10 : 52**

அதாவது, இந்த காரியங்களின் சரியான தன்மைகளை புரிந்துகொள்கிறபோது, ஏசாயா தீர்க்கதரிசனத்தில் சொல்லப் பட்டிருக்கிற அனைத்து குருடர்களுக்கும் எல்லா முடவர்களுக்கும், எல்லா செவிடர்களுக்கும் வரவிருக்கும் நல்ல மகிழ்ச்சிகரமான நாளைக் குறித்து நாம் சந்தோஷப்படலாம். (ஏசா. 35 : 5, 6).

“***கண்கள் இருந்தும் காண்பதில்லை, காதுகள் இருந்தும் கேட்பதில்லை.***” மிக நன்மை பயக்கக்கூடிய காரியங்களுக்கும், மிகவும் பயனுள்ள காரியங்களுக்கும் மொத்த உலகமும் குருடாகவும் செவிடாகவும் இருக்கிறதென வேதாகமம் குறிப் பிடுகிறது. பழைய காலத்தின் பர்திமேயு போல, இங்கொன்றும் அங்கொன்றுமாக ஒருவரோ அல்லது ஒரிருவரோ தங்கள் செவிட்டு தன்மையிலிருந்தும் குருட்டாட்டத்திலிருந்தும் விடுதலை யடையும்படியாக சரியான படிகளைத் தெரிந்தெடுத்து, விடுதலை

அடைவதற்கான காரியங்களை பிடித்துக்கொள்கிறார்கள். பரி. பவுல் இந்த குருட்டு தன்மையின் நிலைமையைக் குறித்து இவ்வாறாக நமக்கு சொல்கிறார்: "**தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்** (சாத்தான்) **அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.**" (2 கொரி. 4 : 4).

தேவனுடைய நற்காரியங்களை குறித்த மனுஷ புரிந்துகொள்ளுதலையும், அவர்களுடைய மேலான நலனுக்காக அவர் வைத்திருக்கும் காரியங்களையும் சாத்தானானவன் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தன்னுடைய குருடாக்கும் வேலையை ஆரம்பித்து விட்டான். அவற்றை தற்பொழுதும் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறான். பாவத்தின் தண்டனையான "**நீ சாகவே சாவாய்**" என்றதானது தேவனுடைய ஏமாற்று வேலை என்று ஆதித்தாயாகிய ஏவாளிடம் அவன் கூறியதிலிருந்தே சர்வ வல்லவருக்கு முரணான செயல்களை ஆரம்பித்தான். "**நீங்கள் சாகவே சாவதில்லை**" என்று அறிவித்தான். மேலும், அறிவு சார்ந்த மகா ஆசீர்வாதங்களிலிருந்து அவளை விலக்கி வைக்கும்படியாகவே இப்படியாக தேவன் உன்னிடம் சொல்லியிருக்கிறார் என்றும், அவளுடைய மற்றும் அவளுடைய புருஷனுடைய உண்மையான நலன்களானது கீழ்ப்படியாமையின் மூலமாகவே பெற இயலும் என அவளை நம்ப வைத்தான்.

நம்முடைய ஆதி பெற்றோரிடம் சாத்தான் என்ன நோக்கத்தோடு இந்த காரியங்களை மாற்றிக் காண்பித்தான்? என்ற கேள்வி இயல்பாகவே தோன்றுகிறது. அவர்கள் கீழ்ப்படியாமற் போவதிலும், தேவனை விட்டு விலகி போவதிலும் அவன் ஏன் ஆர்வமுள்ளவனாயிருந்தான்? இதற்கு பதில் என்னவெனில், இந்த வழியில் மட்டுமே, அவன் அவர்களை வெற்றிகரமாக பாவத்தின்மூலம் தனது சொந்த அடிமைகளாக்க முடியும் என்பதாலேயே. தங்களுடைய தேவனை தங்கள் ஞானமுள்ள அன்பின் தகப்பனாக அங்கீகரித்து, பற்றுறுதியாக இருந்திருப்பார்களேயானால், அவருக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்திருப்பார்கள்; பாவத்தின் அடிமைகளாக இருந்திருக்க மாட்டார்கள்.

சாத்தானானவன் தேவனுடைய தெய்வீக குணத்தையும் ஏற்பாட்டையும் தவறுதலாகக் காண்பிக்கும் பொருட்டாக இன்றளவும் கிட்டதட்ட ஆறாயிரம் ஆண்டுகளாக இந்த வேலையைச் செய்து வருகிறான். அவன் இருளுக்கு வெளிச்சத்தையும், வெளிச்சத்திற்கு இருளையும் போடுகிறான் என்று பரி. பவுல் சொல்லும் போது, "**அவனுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே**" என்று கூறுகிறார். அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு இந்த பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனங்களை குருடாக்கிவிட்டதை நமக்கு பரி. பவுல் சொல்லிய பிறகு, மேலும் விளக்கமாக, தேவனுடைய மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக, தங்கள் இருதயங்களில் பிரகாசிக்கப்பட வேண்டும் என்றும், தேவனுடைய உண்மையான நற்குணங்களை அவர்கள் காண வேண்டும் என்று விவரிக்கிறார். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வேலையின் மூலமாக, அதனை காண்கிறவர்கள் மீது தேவனுடைய நற்குணமாகிய இந்த வெளிச்சமானது பிரதிபலிக்கிறது என்று விவரிக்கிறார்.

மிக அழகாக, கவிதை நடையில் அப்போஸ்தலர் இந்த ஆச்சரியமான சத்தியத்தை விவரிக்கிறார். இதனை வேத மாணாக்கர்கள் மென்மேலும் மதித்துணர்கின்றனர். தேவன் அன்பாகவே இருக்கிறார். நாம் கேட்டிருக்கிற அனைத்து விஷயங்களும் எதிர்மறையாகவே நமக்குச் சொல்லப்பட்டது. அவை அனைத்தும் நமது மனங்களை குருடாக்கும் விதமாகவும், நமது உற்ற சிநேகிதரைக் குறித்து ஆராயாமல் முன்கூட்டியே தவறான எண்ணம் கொள்ளும் விதமாகவும் நமக்குச் சொல்லப்பட்டது. சாத்தானுடைய தொடர்ந்தேர்ச்சியான செய்கையினால், புறமதஸ்தவர்களிடத்தில் மட்டுமல்ல கிறிஸ்தவர்கள் மத்தியிலும் பல்வேறு போதனைகளைச் சத்தியத்திற்கு மாறாக புரட்டிக் காண்பித்தான். பரி. பவுல் இவைகளைக் குறித்து கூறுகையில் அவை "**பிசாசுகளின் உபதேசங்கள்**" என்கிறார். (1 தீமோ. 4 : 1).

இருண்ட யுகங்களின்போது, எதிராளியானவன் நம்முடைய கிறிஸ்தவ கோட்பாடுகளில் தலையிட்டு, மேற்கூறிய உபதேசங்களை உட்புகுத்தி அவைகளை கிறிஸ்தவ சபைகளின் மீது வரைந்து, இருண்ட நாளின் நாடகங்களின் மூலமாகவும் அவைகளை செயல்படுத்தினான். இவை அனைத்தும் தேவன் ஒரு மோசமான, கற்பனையே செய்ய முடியாத ஓர் பேய் என்பது போன்று சித்தரித்தன. அவர் நம்முடைய மனுக்குல சந்ததியை சிருஷ்டிக்கும் போதே கிட்டதட்ட ஒவ்வொரு நபரையும் நித்தியகாலமாய் வாதிக்க வேண்டும் என்று ஆதி முதலே திட்டம் பண்ணியிருந்தார் எனவும் அதையே செய்து கொண்டிருந்தார் எனவும் இவை அனைத்தும் தவறாய்க் காண்பிக்கின்றன. இருண்ட யுகத்தின்போது இவ்வாறாக கொடூரமான முறையில் தவறாக காண்பிக்கப்பட்டதின் நிமித்தம் தேவனிடம் உலகமானது இழுக்கப்படவில்லை என்பதில் ஆச்சரியமில்லை. ஜனங்கள் மத்தியில் பயபக்தி உண்டாக வேதாகமமானது மறுபடியும் வெளிவந்த பிறகும்கூட, இந்த பிசாசுகளின் உபதேசங்கள் அதனோடு ஒட்டிக்கொண்டு, அன்பின் தேவனிடம் உலகமானது இசைந்திருப்பதற்கு தடையாக மாறிற்று என்பதும் ஆச்சரியமல்ல. நாம் அனைவரும் எதிராளியால் கிட்டதட்ட குருடாயிருந்தோம் என நாம் இப்பொழுது கற்றுக் கொள்கிறோம். நாம் அவனுடைய குருட்டாட்டத்திலிருந்து விடுபட்டு, இருளிலிருந்து அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தவருடைய கிருபையை எண்ணும்போது நம்முடைய இருதயங்கள் மகிழ்கிறன.

## வெகு சிலர் மாத்திரமே இப்பொழுது காண்கிறார்கள்

அப்போஸ்தலன் எபேசு சபையாருக்கு எழுதுகையில், அவர்கள் சில காரியங்களை கண்டிருந்தாலும், இன்னும் அவர்கள் காண வேண்டியது அநேகம் இருக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறார். அது பின்வருமாறு: "**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், ............... நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்.**" மேலும், "**சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, ................. அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்**" என்கிறார். நாம் இந்த ஜெபத்தை நமது சார்பாக ஏறெடுக்க வேண்டும்.

உலகத்தைப் பொறுத்தவரையில், அது இன்னும் துன்மார்க்கத்தின் இருளில் இருக்கிறது. அப்போஸ்தலன் இதைக் குறித்து கூறுகையில், சாத்தானானவன் செழிக்க வைத்திருக்கிற

மூடத்தனத்தின் கட்டுக்குள் உலகம் இருக்கிறதென கூறுகிறார். பர்திமேயு கண்டது போல, இப்பொழுது வெகு சிலர் மாத்திரமே தங்கள் கண்கள் திறக்க பெற்றிருக்கிறார்கள். அவர்கள் விசேஷ சிலாக்கியங்களை காண்கிற விசேஷித்த பாத்திரங்களாயிருக்கிறார்கள். அவர்கள் குருட்டாட்டமான அறியாமையில் தொடர்ந்து இருக்கும்படியும், அமைதியாக சத்தம் போடாமல் இருக்கும்படியாக சொல்லுகிறவர்களுடைய பேச்சை உதறித்தள்ளி, தேவனுடைய அறிவாகிய வெளிச்சத்திற்காக பெரிதும் ஏங்கியவர்கள் ஆவார்கள். நீதிக்காக பசியும் தாகமும் உடையவர்கள்; நிறைவடையக் கூடிய வாக்குத்தத்தத்தை உடையவராவார்கள். தற்போதைய காலக்கட்டத்தில், பார்வையடையும்படியாக விரும்புகிற அனைவரும் பார்வையடைவார்கள் என நம்பலாம்.




மகிமையான மாறுதல் வாக்களிக்கப்பட்டிருக்கிறது, ஆகையால் தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக! பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பர்திமேயுவை அடையாளமாக குணமாக்கிய அதே மகிமையாகிய வெளிச்சத்தின் அதிபதிக்கு இருளின் அதிகாரியாகிய சாத்தான் வழிவிடுவான். அவர் தம் இராஜ்யத்தைக் கையில் எடுப்பார். தெய்வீக வல்லமையானது இந்த திட்டத்திற்கு உறுதுணையாய் இருக்கிறதால் சாத்தான் ஆயிரவருஷமளவும் கட்டப்பட்டு. அவனுடைய அந்தகார கிரியைகள் ஒழிக்கப்படும். தேவனுடைய உண்மையான குணத்தையும் அவரது அன்பின் ஏற்பாடுகளையும் தவறாக காண்பிக்கப்படுவதற்கு பதிலாக, சத்தியமானது மனுக்குலத்திற்கு கொடுக்கப்படும். தேவனுடைய மகிமையாகிய அறிவின் வெளிச்சமானது சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல மொத்த பூமியும் முழுவதும் நிறைந்திருக்கும். அப்பொழுது ஒருவன் தன் அயலானை நோக்கி, "**கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை: அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள்.**" (ஏசா. 11 : 9; எரே. 31 : 34).

## "குருடான அனைத்து கண்களும் திறக்கப்படும்"

இந்த தீர்க்கதரிசனத்தை வாசிக்கிற அனைவரும் சொல்லர்த்தமான சுபாவப்படியான பார்வையடைதலை குறிக்கிறது என்றே எண்ணுவார்கள். அனைத்து சுபாவ குருடான கண்களும் மேசியாவின் இராஜ்யத்தில் பார்வையடையும் என்று சொன்னால், அது மகிமையான வேலையில் வெறும் சிறு பகுதியே நிறைவேறுகிறதாக இருக்கும். அறியாமை மற்றும் மூட நம்பிக்கையினால் உண்டான குருட்டுத் தன்மையை சாத்தான் நமது சந்ததியின் மீது சுமத்தியதானது சரீரப்பிரகாரமான குருட்டு தன்மையை விட பன்மடங்கு மோசமானதாகும். குருடான கண்கள் யாவும் திறக்கப்படும் என்றும், செவிடான காதுகள் யாவும் திறவுண்டு போகும் என்றும் நமது ஆண்டவர் மூலம் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது. "**கண்கள் யாவும் அவரை காணும், அவரை குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்**" என்று வேத வாக்கியம் அறிவிப்பதிலிருந்து அது சந்தேகமின்றி புரிந்து கொள்ளுதலின் கண்கள் அதாவது அறிவின் கண்கள் என்பதற்கு விசேஷித்த குறிப்பாக இருக்கிறது. இயேசு தமது சீஷர்களை நோக்கி "**இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னை 'ஒரு போதும்' காணாது. நீங்களோ என்னைக் காண்பீர்கள்**" என்று கூறியிருக்கிறார். (ஆங்கில வேதாகமத்தில் ஒருபோதும் – no more என்றே உள்ளது.) மேலும், அப்போஸ்தலர் யோவானும் கூறுகையில், "**அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்**" என்கிறார்.

முதலாம் உயிர்த்தெழுதலின் ஆச்சரியமான மாறுதலில், சபை வகுப்பார் தூதர்களைவிட மேலான ஆவி ஜீவிகளாக மாற்றப்பட்டனர். அவர்கள் எஜமானரைப் போன்றே ஆவி ஜீவிகளாக இருப்பதால் அவரை முக முகமாய் தரிசிப்பார்கள் (காண்பார்கள்). ஆனால், உலகமானது இவ்வண்ணமாக ஒருபோதும் காணப்போவதில்லை. அவர்கள் தங்களுடைய திறக்கப்பட்ட அறிவின் கண்களினால் இப்பொழுது விசுவாசிகளாக பிதாவையும் இயேசுவையும் விசுவாச கண்களினாலும் புரிந்து கொள்ளும் (அறிவின்) கண்களினாலும் காண்கிறது போல அவரைக் காண்பார்கள். தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை "**கண் காணவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.**" தேவன் இந்த காரியங்களை தமது ஆவியினால் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறதை நம்முடைய ஆவிக்குரிய கண்களினால் காண்கிறோம்.

அதுபோல, ஆயிர வருஷ யுக காலத்தின்பொழுது தேவனுடைய நன்மைகளையும், பெரிதானவைகளையும், அன்பையும் வல்லமையும் காணத்தக்கதாக அனைத்து குருடான கண்களும் திறக்கப்படும். மேசியாவின் இராஜ்யத்தின் மூலமாக அந்த அறிவிற்கு கொண்டுவரப்பட்டு, தேவனை உலகமானது அறிந்து கொள்ளும். இந்த சிலாக்கியங்களை தாங்கள் பயன்படுத்திக் கொண்டு, இயேசுவானவர் கூறியிருக்கிற, "**ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்**" என்ற மகிமையான அறிவை அதன்பின் அடைவார்கள்.

## உதவியாளர்கள், தடை செய்பவர்கள் அல்ல

அடையாளத்தில், பர்திமேயுவை அமைதியாய் இருக்கும்படி ஜனங்கள் முதலாவது அதட்டினார்கள். பின்னர் இயேசு அவனை அழைத்தபோது, அவர்கள் எல்லாரும் சேர்ந்து அவனுக்கு தைரியமூட்டுகிற வார்த்தைகளைச் சொல்லி, மீட்பரிடத்தில் அந்த குருடன் வந்து சேர்வதற்கு உதவினார்கள். அவர்களுடைய பிந்திய செயலானது தேவனுடைய ஜனங்கள் எல்லாருடைய நடத்தையையும் குறிக்கிறது. வழிதப்பி செல்கிற குருடர் மற்றும் மூடநம்பிக்கையிலுள்ளவர்கள் எல்லாரையும் மீட்பரிடம் சேரும்படி ஊக்குவித்து, அவர்களுடைய குருட்டாட்டத்திலிருந்து அவர்களை மீட்பதற்கு அவர் உண்மையில் விருப்பமுள்ளவராயும் கிருபையுள்ளவராகவும் இருக்கிறார் என்பதை உணர வைக்க வேண்டும்.

இந்த காரியங்களை நம் வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுகளுக்கும் பொருத்தலாம். எப்படியெனில், வேதாகமத்தினுடைய அழகுகளை காண முடியாதபடி அநேகர் குருடராயிருக்கின்றனர், ஆதலால், அதின் உண்மையான போதனைகளின் அழகுகளை காணும்படியாக தங்களுடைய கண்கள் திறக்கப்பட்டோர் அனைவரும் அதே ஆசீர்வாதத்தை மற்றவர்கள் பெறும்படியாக உதவிபுரிய வேண்டும். இந்த பாடத்தை சுபாவ கண் பார்வைக்கும் நாம் பொருத்தலாம். சிலர் தங்கள் (உலக) வேலைகளிலும், சிலர் இம்மைக்குரிய ஆசாபாசங்களிலும் ஆழ்ந்து மூழ்கியிருப்பதால் அவர்கள் தங்கள் கண்களை இயற்கையின் மகிமையான அழகுகளை காணத்தக்கதாக

உயர்த்துவதில்லை. பிரகாசிக்கிற நட்சத்திரங்கள் தேவ ஞானத்தையும் சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகரையும் அறிவிக்கின்றன. ஆயினும், இந்த செய்தியிலிருந்து வரும் ஆசீர்வாதத்தைக் குருட்டாட்டத்திலிருக்கிறவர்கள் காண்பதற்கு தவறிவிடுகிறார்கள். **"அவர்கள் கண்கள் இருந்தும் காணாதிருக்கிறார்கள்."**

மொத்த இயற்கையும் பெரிதும் நித்தியமுமான தேவனைப் பற்றி விவரிக்கிறது. அது நம்மைக் குறித்து, மனுக்குலமானது பூமிக்குரியவைகளில் அவருடைய முதன்மையான கைவேலையாக திகழ்கிறது என்று கூறுகிறது. ஆதலால் அவரைக் குறித்து அறிய நாடுவதிலும், அவருக்கு ஊழியஞ்செய்வதுமே நம்முடைய தலையாய நோக்கமாக இருக்க வேண்டும். நட்சத்திரங்களினுடைய பாடங்களுக்கு அநேகர் குருடாகவும் செவிடாகவும் இருக்கின்றனர் என்று தீர்க்கதரிசி கூறுகையில், **"பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்கு பேச்சுமில்லை வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப் படுவதுமில்லை"** என்கிறார். தாங்கள் உணருகிற சந்தோஷமின்மைக்கு காரணம் தங்களில் உள்ள சொந்த சுயநலத்தின் விளைவுதான் என்பதை சிலர் காணாமல் மனதளவில் குருடராகவே இருக்கின்றனர். தங்களுடைய வீடுகள் சுயநல பற்றினாலும், கோபத்தினாலும், போதுமென்ற மனநிறைவில்லாததாகவும் இருப்பதற்கு பதிலாக ஆறுதல் மற்றும் சந்தோஷத்தினாலும் நிறைந்திருந்தால், அவர்களுடைய வீடுகள் மிகவும் அழகாயிருக்கும் என்பதை அவர்கள் காண்பதில்லை.




"இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னை **ஒருபோதும்** காணாது" யோ.14:19
– (ஆங்கில வேதாகமம் பார்க்கவும்)

இத்தகைய காரியங்கள் தங்களிலோ அல்லது மற்றவர்களிலோ நடந்தேறுவதை உணருகிற அனைவரும் **"ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்"** என்று கதறத்தக்கதாய் இருக்க வேண்டும். மேலும், ஆதாமின் சந்ததி முழுவதிற்கும் அறிவின் கண்கள் திறக்கப்படும்படியாக மேசியாவின் இராஜ்யத்தில் இந்த ஆசீர்வாதம் அளிக்கப்படும் என்றும் அதின் காலம் சமீபித்திருக்கிறது என்பதையும் அவர்கள் அறிகிறபோது சந்தோஷமடைகிறவர்களாய் இருக்க வேண்டும்.

***

# நான் அபிஷேகம் பண்ணினவர்களைத் தொடாதிருங்கள்

## தாவீது ராஜாவின் சோதனையான அனுபவங்கள்

*1 சாமுவேல் 26*

சவுல் ராஜாவினால் நாட்டை விட்டு துரத்தப்பட்டு வேட்டையாடப்பட்ட இளைஞனான தாவீது மாறுப்பட்ட வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தார். நியாயமாகவோ அல்லது அநியாயமாகவோ சமுதாயத்தினரால் ஒதுக்கி வைக்கப்பட்ட துர்பாக்கியசாலிகளாகிய ஒரு வகுப்பினருடன் தாவீது சீக்கிரத்தில் சேர்ந்து கொண்டார். அவர்களில் சிலர் சந்தேகத்திற்கிடமில்லாத குற்றவாளிகள்; சிலர் சிறையில் வைக்கப்பட வேண்டிய கடனாளிகள், தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ள ஓடி வந்தவர்கள். இந்த சம்பவங்கள் எல்லாவற்றிலும் இளைஞரான தாவீது மனமொடிந்த, ஆயுத மேந்தக் கூடிய சற்றேறக்குறைய நானூறு பேருக்குத் தானே தலைவனாகக் காணப்பட்டார். '**சத்துருக்களை சிநேகியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.**" (லூக். 6 : 27).

பிற்காலத்தில் அவருடைய இராஜ்ய வேலையை ஆயத்தப்படுத்துவதற்கு அது மிகப் பெரிய பயிற்சியாக அமைந்தது. அது சமுதாயத்தில் நன்மை செய்யாதவர்களின் நிலைமையைக் குறித்த உள் பக்கத்தின் பார்வையை அவருக்குக் கொடுத்தது. தாவீது தானும் தன்னுடைய சிறிய படையும் ஜீவிப்பதற்காக சுங்கம் போன்ற வரியை சாவடியில் விவசாயிகளிடமிருந்து வசூலித்தார். இந்த சுங்க வரிக்கு பிரதிபலனாக அடிக்கடி பெலிஸ்தியாவிலிருந்தும் யோர்தானைக் கடந்து வந்த மோவாபியர்களாகிய படையெடுக்கும் கொள்ளையர்களிடமிருந்தும் தாவீது சந்தேகத்திற்கிடமில்லாமல் அவர்களைக் காப்பாற்றி வந்தார். சவுல் இராஜாவின் அரசாங்கத்தால் உண்மையிலேயே அது வரையில் போதுமான அளவு காவல் பாதுகாப்பு கொடுக்க முடியவில்லை. தன்னுடைய குடி மக்களின் நன்மைகளைச் சரியாகப் பாதுகாப்பதற்கு பதிலாக இராஜா தன்னுடைய உண்மையான ஊழியக்காரனான தாவீதுக்கு எதிராக பொறாமையினால் எரிச்சலடைந்து பைத்தியமாகி காட்டு மிருகங்களை வேட்டையாடச் செல்லுவதைப் போல அவரை அவ்வப்போது பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

தாவீதோடுகூட வந்தவர்களில் அவருடைய சகோதரியின் மகன்கள் மூன்று பேர் இருந்தனர். பிற்காலத்தில் தாவீது ராஜாவாக ஆனபொழுது இவர்கள் மூவரும் பிரசித்தி பெற்றவர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவன் யோவாப். அவன் சேனைகளின் படைத்தலைவன் (தளபதி) ஆனான். மற்றிருவராகிய அபிசாயும் ஆசகேலும் ஆற்றல் மிகுந்தவர்கள். அவர்கள் பிற்காலத்தில் ராஜ்யத்தில் புகழ் பெற்றவர்களாயிருந்தனர்.

## தாவீதின் பெருந்தன்மையான குணம்

ஒரு சமயம் தாவீதும் அவருடைய தோழர்களும் அதுல்லாம் குகையை பலமான அரணாகக் கொண்டிருந்தார்கள். அவர் தேசத்தை உள்நாட்டுப் போரில் ஈடுபடுத்துவதற்கு மிகவும் அதிகமாக திராணி உடையவராய் இருந்த போதும் அதனைச் செய்ய முற்படவில்லை. உண்மையிலேயே மிகுந்த மரியாதை கொடுத்த பெரும்பான்மையான ஜனங்கள் ஆரம்பம் முதலே அவர் பக்கத்தில் இருந்தார்கள். சவுல் ராஜா மீது அவருடைய வெற்றி மிக எளிதாக நடந்திருக்கும். அது தேவனுடைய சித்தம் என்று அவர் எண்ணி அவர் தன்னைத்தானே எவ்வளவாக சுலபமாக ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும்! சாமுவேல் தீர்க்கதரிசியின் மூலமாக கர்த்தர் அவரை இராஜாவாக அபிஷேகம் பண்ணினார் என்பதை நினைவு கூர்ந்தார். இது ஆட்சியை எடுக்க அவருக்குரிய காலம் அல்ல என்றும் ஆனால் தெய்வீக வல்லமையின்படி தேவன் நிர்ணத்த நேரத்தில் சவுலின் இராஜ்யம் தள்ளப்படும்பொழுது அதன் கட்டுப்பாட்டை சவுலின் வாரிசான ராஜாவாக அவருக்கு கொடுக்கும்பொழுது அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் எண்ணி இருந்தார்.

கர்த்தருக்காகக் காத்திருப்பது தேவனுடைய ஜனங்களுக்கு எவ்வளவு ஆசீர்வாதமானது! **"நான் எழும்பிக் கொள்ளையாடும் நாள் மட்டும் எனக்காகக் காத்திருங்கள்"** என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய காலங்களும் வேளைகளுமே

நமக்கு மிகவும் சிறந்தவை ஆகும். கர்த்தருடைய சித்தத்திற்கு நாமே முன்னேறிச் செல்வதற்கான முயற்சி எதிர்மறையான பலனை ஏற்படுத்தும் தாவீது தேவனிடத்தில் முழுமையான விசுவாசத்தைக் கொண்டிருந்தார். அவருக்குக் கீழ்ப்படியும் ஆவியையும் உடையவராயிருந்தார். ஆகவே அவர் தேவனுடைய சொந்த இருதயத்திற்கு உகந்த மனிதர் என்று அழைக்கப்பட்டார், ஆனால் அவர் பரிபூரணமாக இருக்கவில்லை. அவர் எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தையே செய்து கொண்டிருக்கவில்லை. ஆனால் தேவனுடைய சித்தம் அவருடைய இருதயத்தின் உண்மையான விருப்பமாக இருந்தது; அவர் மாம்ச பலவீனத்தின் மூலமாக தவறான நடவடிக்கைகளைச் செய்தார். ஆனால் உடனடியாகத் தன்னுடைய தவறுகளைக் கண்டவுடன் உடனடியாக மனம் வருந்தி தெய்வீக மன்னிப்பையும் அவருடைய நடத்தையில் மாறுதல் பெறவும் உண்மையாய் விரும்பினார்.

ஜோசப் பார்க்கர் என்னும் மத சாஸ்திர விற்பன்னர் இந்த அதுல்லாம் குகை சம்பந்தமாக கூறும்போது: “இந்த சித்தரிப்பில் காட்டப்பட்டுள்ளபடி இது, இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த நிலைமையையே அடையாளப்படுத்துகிறது என்பதை கண்டுபிடிக்க எவ்விதமான கடின முயற்சியும் தேவையில்லை. அவர் மனுஷரால் அற்பமாக எண்ணப்பட்டவராகவும் தள்ளப்பட்டவராகவும் இருந்தார்; அவர் தலை சாய்க்க இடமில்லாதவராக இருந்தார். உடனுக்குடன் அவரைச் சூழ்ந்து கொண்ட ஜனங்கள் கணக்கற்ற எதிர்பார்ப்புகளுடன் தனிப்பட்ட தாழ்வு மனப்பான்மையிலும், சமுதாய அளவில் தரம் குறைந்தவர்களாகவும் இருந்தனர். நாம் பூமி என்றழைக்கும் இந்த அதுல்லாம் குகையில் தேவ குமாரன் வந்திருந்தபோது அவரைச் சுற்றிக் கூட இருந்தவர்கள் மிகச் சிறந்த தைரியசாலிகளோ அல்லது அறிவாளிகளின் கூட்டமோ அல்ல.”

தன்னைப் பின்பற்றுவர்களுடன் அதுல்லாம் குகையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தபொழுது தாவீது வீட்டு நினைவாகவே இருந்தார். அவர் தமது சொந்த ஊரான பெத்லகேமின் கிணற்றிலுள்ள நல்ல தண்ணீரை விரும்பியதை இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. அது அவரிடம் இருந்திருந்தால், கிடைத்திருந்தால் எவ்வளவு சந்தோஷமானதாக எண்ணி இருப்பார். அவருடைய விசுவாசமுள்ள ஊழியக்காரர்களில் மூன்று பேர் இந்த ஆபத்தான பிரயாணத்தை மேற் கொண்டனர். அவர்களில் ஒருவன் தாவீதினுடைய சகோதரியின் மகன். அவன் இந்தப் பிரயாணத்தைத் தாவீதுக்குத் தெரியாமல் மேற்கொண்டான். இது இரண்டு காரணங்களுக்காக ஆபத்தானது : முதலாவது அவர்கள் சவுல் ராஜாவினால் துரத்தப்பட்டவர்கள்; இரண்டாவது அப்பொது பெத்லகேம் பெலிஸ்தியர் வசம் இருந்தது; ஆயினும் இந்தக் கஷ்டங்களோடு மட்டுமல்லாது இந்த வீரமுள்ள மனிதர்கள் தங்களுடைய தலைவனிடத்தில் அன்பையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்தும்படியாக விருப்பமான அந்த கிணற்றிலிருந்து தோல் பையில் தண்ணீர் கொண்டு வந்தார்கள்.

அவர்கள் வந்து சேர்ந்தபொழுது அதைத் தாவீதுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். அப்பொழுது அவர் தம்முடைய இருதயத்தின் ஆச்சரியமான உண்மைத்துவத்தைக் காட்டினார். அவர்கள் காட்டிய மாபெரும் பக்தியைப் பாராட்டியதோடு மட்டுமல்லாது அவர்கள் ஆபத்தில் ஓடிச் சென்றுகொண்டு வந்த தண்ணீர் மிகவும் மதிப்புள்ளது, அது மிகவும் விலையேறப் பெற்றது அதை எளிதில் உபயோகிக்க முடியாது என்று பாராட்டினார். தாங்கள் அனுபவித்த ஆசீர்வாதத்திற்காகவும் ஆறுதலுக்காகவும், இப்பேற்பட்ட உண்மையான கூட்டாளிகளின் ஆதரவுக்காகவும் கர்த்தரிடத்தில் நன்றியை ஏறெடுத்தும் படைக்கும் பலியாக அவர் அதைத் தரையில், (பூமியில்) ஊற்றினார். தாவீதின் பெருந்தன்மையையும் கர்த்தரிடத்தில் காட்டிய பக்திவைராக்கியத்தையும் அவருடைய விசுவாசமும் இந்த சம்பவத்தில் மறுபடியும் காட்டப்பட்டுள்ளது! இது அவரை ஒரு சராசரி மனிதனைக் காட்டிலும் அதிகமான ஓர் உயர்ந்த மனிதனாகக் காட்டுகிறது.

## இராஜ்ய வேலைக்கான பயிற்சி

இந்த சமயத்தில் தாவீதும், அவரோடிருந்த சிலரும் நோப் என்று அழைக்கப்படும் இடத்தில் இருந்தார்கள். அங்கே ஆசாரியனாகிய அபிமெலேக்கு அவருக்கு இரக்கம் காட்டினார்.



சவுல் இராஜா தாவீதைக் கொல்ல முயற்சி செய்தல்
(1 சாமு. 18 : 11)

சவுல் ராஜா இதை வேவுக்காரர்கள் மூலமாக அறிந்து கொண்டு அந்த இடத்தில் இருந்த எல்லா ஆசாரியர்களையும், அவர்களுடைய சந்ததியாராகிய எண்பத்தைந்து பேரையும் கொன்று போட்டான். இந்தக் காரியம், அபிமெலேக்கின் மகன்களில் ஒருவனை ஆசாரியர்களுடைய ஏபோத்தோடுகூட தாவீதிடம் கொண்டு வந்து சேர்த்தது. தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தாவீதுடன் சேர்ந்து கொண்டான். இவைகளெல்லாம் தாவீதின் நிலைமையை பாதுகாப்பாக வைப்பதற்கு உதவி செய்தது, சவுலை விட்டு எல்லாமும் அத்துடன் தேவனுடைய தயவும் நீங்கிப்போய்விட்டது என்பதை அவன் அறிந்து கொண்டான். அத்துடன் மட்டுமல்லாது சவுல் தேவனுக்கும் அவருடைய தெய்வீக திட்டத்துக்கும் எதிராக தொடர்ந்து போராடினான்.

இந்தச் சூழ்நிலையில் வரப் போகின்ற வேலையில் சிறப்பாக இருப்பதற்கு ஆயத்தப்படும்படியாக தாவீதின் அனுபவத்தை அதிகரிப்பதற்காக அவருடைய படையின் எண்ணிக்கை படிப்படியாக அறுநூறாக உயர்ந்தது. பிஷப், வில்பர்ஃபோர்ஸ் என்பவர் இதனைக் குறித்து இவ்விதம் கூறுகிறார்: “நாட்டில் இருந்து விரட்டப்பட்ட நிலையில் அந்த காட்டு வாழ்க்கையில் அறிவு விருத்திக்கும் ஜனங்களை அரசாட்சி செய்வதற்குமான ஓர் பலமான பயிற்சி அவருக்குக் கொடுக்கப்பட்டது. முழுமையான தனிப்பட்ட மேலாண்மை மட்டுமே, இப்படிப்பட்ட கீழ்ப்படியாத அடங்காத போக்குடையவர்களைக் கட்டுப்படுத்தும். இப்படிப்பட்ட மனிதர்களுக்கு தலைவனாக இருப்பதற்குத் தாவீதுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு எஜமானனாக இருந்து ஜனங்களை அரசாளும் இரகசியத்தையும், தள்ளப்பட்டவர்களுடைய இருதயங்களை இசைவும் இணக்கமுமாகப் பின்னி இணைக்கவும் கற்றுக் கொண்டார்” என்று கூறுகிறார்.

அடிக்கடி ராஜாவாகிய சவுல், தாவீதை அழிப்பதற்காக வெறி கொண்டவனாய் இருந்தான். இப்படிப்பட்ட சம்பவங்களில், ஒருமுறை சவுல் பின் தொடர்ந்து வருகையில் தாவீதும் அவனுடைய கூட்டத்தாரும் சவக்கடலின் மேற்குப் பக்கத்தில் கற்பாறைகளால் ஆன இருண்ட குகைகளுக்குள் வந்து தங்கி இருந்தனர். அப்பொழுது சவுல் ராஜாவும் அவனுடைய பெரும்

படைவீரர்களும் தாவீது தங்கி இருந்த அதே குகையில் தங்கி ஓய்வு எடுத்து புத்துணர்ச்சி பெறுவதற்காக நுழைந்தார்கள் – அது எவ்வளவு நேரம் என்பது நமக்குத் தெரியாது. சில குகைகளில் ஆயிரத்து ஐநூறு பேர்கூட பாதுகாப்பாக இருக்கக் கூடிய அளவிற்கு அவ்வளவு பெரியதாக இருக்கும். இவைகளில் ஒன்று என்கேதியிலிருந்து இருபது மைல் தூரத்தில் உள்ளது. அதில் ஒரு தடவை முப்பதாயிரம் மக்களுக்குக் குறையாமல் ஒளிந்து கொண்டார்கள். இந்த குகையின் உட்பகுதி நடு இரவைப் போல இருட்டாக இருக்கும். ஒருவர் உள்ளிருந்து வெளியே தெளிவாகப் பார்க்க முடியும், ஆனால் குகைக்கு உள்நோக்கிப் பார்த்தால் நான்கு அடி தூரம்கூட காண்பது முடியாத காரியமாகும்.

சவுலும் அவன் தோழர்களும் ஓய்வெடுப்பதற்காக அந்தக் குகையில் நுழைந்தபொழுது தாவீதும் அவர் கூட்டாளி களும் குகையின் இன்னும் பின் பகுதியில் இருந்தார்கள். அவர்கள் குறைந்தபட்சம் சவுலாவது கொல்லப்பட வேண்டும் என்று இருந்தார்கள். ஏனெனில் அவர்களுக்குக் கிடைத்த சோதனையான அனுபவங்கள், ராஜா தங்களுக்கு செய்த மற்றும் செய்து கொண்டிருந்த எல்லாத் தீமைகளுக்கும் முடிவாக சரியாக பதலளிப்பது என்று தாவீதின் கூட்டாளிகள் ஆசையாக இருந்தனர். ஆனால் தாவீது அதற்கு உடன்படவில்லை. ஆனால் அதற்கு பதிலாக ராஜா தன்னுடைய பிடிக்குள் இருக்கிறான் என்பதைக் காட்டவும் சவுலை தான் விரும்பினால் கொன்றிருக்க முடியும் என்பதை விளக்கிக் காட்டவும் தமது இராஜ விசுவாசத்தைக் காட்டவும் சவுலின் அங்கியில் ஒரு சிறு பகுதியை மட்டும் தாவீது வெட்டிச் சென்றார்.

பின்னால் சவுல் ராஜாவின் கூட்டத்தினரால் அபாயம் விளைவிக்க முடியாத அளவிற்கு குறிப்பிட்ட தூரம் சென்ற பின்பு தாவீதும் அவர் கூட்டாளிகளும் தங்களைக் காண்பித்து, ராஜா அவனுடைய குடிமக்கள் அவனிடம் விசுவாசமாக இருப்பதைப் பாராட்டவில்லை என்றும், அவர்களே அவனுடைய ஜீவனை எடுக்காதபொழுதும் அவர்களுடைய ஜீவனை அவன் வாங்கத் தேடுகிறான் என்றும் எதிர்ப்புத் தெரிவித்தனர். சவுலின் நன்மையான சுபாவம் மேலெழுந்தது. "**நீ என்னைக் காட்டிலும் அதிக நீதிமான்**" என்று அழுதுக் கொண்டே சொன்னான். அந்த தடவை அவன் இனிமேல் அப்படிச் செய்வதில்லை என்ற வாக்குறுதியினால் துரத்துண்ட தாவீதை வேட்டையாடுவது கைவிடப்பட்டது. இதுமட்டுமல்லாமல் இதே போன்ற மற்றொரு அனுபவம் வெகு சீக்கிரத்தில் இருந்ததாக நம்முடைய பாடம் சொல்லுகிறது.

இந்த சமயம் தாவீதும் அவருடைய சகோதரியின் மகனும் மட்டும் சவுலின் பாளையத்திற்குள் சென்று சவுலின் தலைமாட்டின் பக்கத்தில் இருந்த ஈட்டியையும் அவனுடைய தண்ணீர் செம்பையும் எடுத்துச் சென்றனர். இவற்றுடன் புறப்பட்டுச் சென்ற அவர்கள் சிறிது தூரத்தில் பள்ளத்தாக்கிற்கு எதிர்புறத்தில் இருக்கிற ஒரு குன்றின் மீது பாதுகாப்பாக நின்று சவுலும் அவன் சேனையும் கேட்கும்படியாகப் பேசினர். அவர் சவுலின் வீரர்களைக் காட்டிலும் எச்சரிக்கையுடன் இருப்பதோடு மட்டுமல்லாது இராஜாவின் நன்மைக்காக மிகுந்த விசுவாசமுள்ள வராக இருப்பதாகவும், வாலிபரில் ஒருவனை அனுப்பினால் ஈட்டியையும் தண்ணீர் செம்பையும் கொடுத்தனுப்புவதாகவும் குறிப்பிட்டார்; அவனுக்குத் தீங்கு செய்யவில்லை, ராஜாவுக்கு முழுமையான விசுவாசத்தைக் காட்டி ஒப்புரவாகுவதற்காகவே இவைகளை எடுத்துக் கொண்டு வந்தார்; விரோதியைப் போல தன்னைப் பின் தொடருவது தவறு என்றும் குறிப்பிட்டார்.

இந்நாளில் நவீன பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட ஓர் ஆயுதந்தரிக்கப்பட்ட ராணுவ முகாமுக்குள் இப்படிப்பட்டதோர் ஊடுருவலைச் செய்வது என்பது இயலாத காரியமாகும். ஆனால் பழங்காலங்களில் அப்படி இருக்கவில்லை. கிதியோனும் அவனுடைய சேனையும் இதைப் போலவே ஓர் ராணுவ முகாமைத் தாக்கினர். மற்றுமோர் உதாரணம் ஆபிரகாம் ஐந்து ராஜாக்களை பின் தொடர்ந்து சென்ற சம்பவமாகும். அவர்கள் யாவரும் சரியான பாதுகாப்பில்லாமல் தூக்கத்தில் இருந்ததை ஆபிரகாம் கண்டு யுத்தஞ் செய்ததில் அந்த ஐந்து ராஜாக்களும் தோற்கடிக்கப்பட்டனர்.

## ஓர் நன்மை பயக்கும் பாடம்

தாவீது தன்னுடைய விரோதியாகிய சவுலின் உயிரை எடுக்க விரும்பாததற்கு விளக்கம் அளித்து உள்ளார், அவன் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் என்றும், அவன் மீது நடத்தப்படும் ஒரு சிறு தாக்குதலும் சர்வ வல்லவருடைய ஒழுங்குமுறையைத் தாக்குவதாகும் என்றார். இதை தாவீது தன் சுய அறிவுடன் செய்யமுடியாது. "**நான் அபிஷேகம் பண்ணி னவர்களைத் தொடாதிருங்கள் என் ஊழியக்காரர்களுக்குத் தீங்கு செய்யாதிருங்கள்.**"

இன்று நாம் இந்த சத்தியத்தை நம்முடைய சிந்தையில் கொண்டிருப்பது நல்லது. எவ்வாறாக இருந்த போதிலும் இன்று உள்ள ஆட்சியாளர்கள் கர்த்தரால் அபிஷேகம் செய்யப் பட்டவர்கள் என்று நாம் எண்ணக் கூடாது. அவர்கள் தங்களைத் தாங்களே அபிஷேகம் செய்து கொள்கிறார்கள். அவர்களுடைய இராஜ்யங்களெல்லாம் இவ்வுலக இராஜ்யங்கள். அதற்கு மாறாக இஸ்ரவேல் தேவனுடைய விசேஷித்த ராஜ்யம். அவர் அதை விசேஷித்த உடன்படிக்கை ஏற்பாட்டின்படி ஏற்றுக் கொண்டார். தெய்வீக அதிகாரத்தினால் சவுல் ராஜா விசேஷித்த அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டான். இது பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகிறது. தாவீதுக்கு அதே அபிஷேக தைலத்தைக் கொண்டு அபிஷேகம் பண்ணி இருந்தாலும் சவுலிடம் முன்பு செயல்பட்டுக் கொண்டிருந்த கர்த்தருடைய அபிஷேகத்தில் தலையிடுவதற்கு அவருக்கு உரிமை கொடுக்கப் படவில்லை, ஆனால் அவர் சவுலை நீக்கிவிட்டு அல்ல, கர்த்தர் கொடுக்கும் வெகுமதிகளை அவர் கொடுக்கும் காலத்திலும் வழி முறையின்படியாக சவுலின் வாரிசாக அவருக்கு உறுதி செய்யப்பட்டது.

பூமியிலுள்ள அனைத்து இராஜ்யங்களின் நாண யங்கள் மேசியாவின் இராஜ்யத்தின் பிரதிநிதிகளாகவே ஆட்சி செய்பவர்களின் ஆளுகையையும் ஆட்சியும் இருப்பதை குறித்துக் காட்டுவதாக இருக்கின்றன. இது ஒரு தவறு என்று நமக்குத் தெரியும். மேசியாவின் இராஜ்யம் இன்னும் ஸ்தாபிக்கப் படவில்லை, நாம் இன்னும் "**உம்முடைய ராஜ்யம் வருவதாக**" என்றுதான் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்.


## பூமியின் ஐந்து உலகளாவிய சாம்ராஜ்யங்கள்

தேவன் தம்முடைய அடையாளமான இராஜ்யத்தை நீக்கிப் போடும்பொழுது கடைசி ராஜாவாகிய சிதேக்கியாவிற்குக் கொடுத்த செய்தியானது "**அது இனி முன்போலிராது. அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், உரிமைக்காரனானவர்**

**வருமட்டும் அது இல்லாதிருக்கும், அவருக்கே அதைக் கொடுப்பேன்**" என்பதேயாகும். இந்த உலகத்தில் தெய்வீக அரசாட்சியைப் பொறுத்தவரை, சிதேக்கியாவின் ஆட்சியிலிருந்து மேசியாவின் ஆயிர வருஷ யுக அரசாட்சி ஆரம்பமாகும் வரையில் அது இல்லாதிருக்கும் என அறிவிக்கப்பட்டது. இவ்வாறாக இருந்த போதிலும் இதற்கு இடைப்பட்ட காலத்தில் புறஜாதிகள் இந்த உலகத்தில் எவ்விதமான இராஜ்யத்தை ஸ்தாபிப்பார்கள் என்பதைக் காட்டுவதற்காக தேவன் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தார். சிதேக்கியாவின் நாளில் இருந்து அதாவது கி.மு. 607-லிருந்து தற்காலம் வரையில் நாம் நான்கு விதமான அரசாங்கங்களைப் பெற்றிருக்கிறோம். நான்காவது கொஞ்சம் வஞ்சகமான வழியில் மாற்றியமைக்கப்பட்டது. அந்த ராஜ்யங்களாவன: (1) பாபிலோனியா, (2) மேதியா-பெர்சியா, (3) கிரேக்கம், (4) ரோம். தற்பொழுது ஐரோப்பாவில் உள்ள அரசாங்கங்களே புதிதாக மினுமினுக்கும் போலியான ரோம சாம்ராஜ்யமாகும். அவர்களுடைய சட்ட முறைகளும் அதன் பேராசைகளும் ரோமானியர்களுடையதைப் போன்று சரியாகவே உள்ளது; அவைகள் தங்களைக் கிறிஸ்தவ ராஜ்யங்கள் என்று அழைத்துக் கொள்கின்றன; பொதுவான கருத்தின்படி இந்த உலகம் முழுவதும் வழக்கமாகக் கிறிஸ்தவ மண்டலம் என்று அழைக்கப்படுகிறது – கிறிஸ்துவின் ராஜ்யம்.

*வேதாகமம் இதை சித்தரித்துள்ளது:* அடையாளமான சிலையில் இந்த அரசாங்கங்கள் எல்லாம் அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளது; பாதங்கள் அதே இரும்பால் ஆனது, ஆனால் சகதி போன்ற ஒட்டக் கூடிய களிமண் பார்ப்பதற்குக் கல்லாலான பாதங்களைப் போல இருக்கச் செய்தது – கல் என்பது தேவனுடைய இராஜ்யத்திற்கு அடையாளமாக இருக்கிறது. ஆகவே ஐரோப்பாலுள்ள ராஜ்யங்கள் வேறு எதையோ காட்டுகின்றன, ஆனால் கிறிஸ்துவின் ஆவியை அல்ல. அவை, கோபம், பொறாமை, பகை, வெறுப்பு, மூர்க்கம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. இவைகள் "**மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள்**" என்று அப்போஸ்தலன் கூறுகிறார்; இவைகள் மேசியாவின் ராஜ்யங்கள் என்று சொல்லிக் கொள்ளும் ராஜ்யங்கள், சிலையின் பாதங்களாகக் காட்டப்பட்டுள்ளன. கல்லாலான ராஜ்யத்தைப் போன்று நிறமுடையது, அது சீக்கிரத்தில் பூமி முழுவதையும் நிரப்பப் போகிறது. (தானி. 2 : 31-45).

மேசியாவின் இராஜ்யம் "**ஒரு கல் கையால் பெயர்க்கப் படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்தது**" என்று சித்தரிக்கப்பட்டுள்ளது. அது, மனுஷ சக்தியினால் உண்டாக் கப்பட்டது அல்ல; சிலையின் கால் விரல்களில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த ராஜாக்களின் நாட்களிலே சிலையானது மோதி, தூளாக்கப்பட்டு பறக்கடிக்கப்படும். அந்தக் கல்லோவென்றால் பெரிய பர்வதம் ஆனது; அதாவது பூமியிலுள்ள எல்லாவற்றிற்கும் கர்த்தரின் ராஜ்யம் ஆனது. மோதுதல் வெகு சீக்கிரத்தில் நடக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். ஐரோப்பாவில் இரண்டு கட்டங்களாக நடந்த யுத்தமானது தேசங்களை பலவீனப்படுத்துவதற்கும் அவர்களை அடுத்த இக்கட்டு நிலைமைக்கு தயார்படுத்தவும் கர்த்தரால் உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த இக்கட்டின் அடுத்த நிலையானது மாபெரும் பூமியதிர்ச்சி மூலமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அது புரட்சியை குறித்துக் காட்டுகிறது. அது மத்திய கிழக்குப் பகுதியில் அரபிய தேசங்களில் ஏற்கனவே சுற்றி வளைத்துக் கொண்டிருக்கும் புரட்சியையே குறித்துக் காட்டுகிறது.



தாவீது சவுலைக் காப்பாற்றுதல் –1 சாமு. 24 : 11

புரட்சியைத் தொடர்ந்து உடனடியாக வரப்போவது மாபெரும் அடையாளமான அக்கினியாகும். அது தற்பொழுதுள்ள ஒழுங்கு முறைகளை முற்றிலும் அழித்துப் போடும். அக்கினி என்பது அராஜகத்தையும் எல்லாவிதமான ஆட்சி அதிகாரத்தைக் கவிழ்த்துப் போடுதலையும் குறித்துக் காட்டுகிறது. மனிதனுடைய முயற்சிகளும் அதினால் அடைந்த நன்மைகளும் போலியானவைகளாகவும் முடிவில் முற்றிலுமாக அழிவிற்கு வழிநடத்திச் செல்லுவதாகவும் இருக்கின்றன என்பதை மனிதனுக்கு நிரூபிப்பதற்காக தேவன் அவனை அனுமதித்துக் கொண்டிருக்கிறார். பாடம் கற்றுக் கொடுக்கப்பட்டபின் மனுக்குலம் முழுவதும் மேசியாவின் ராஜ்யத்திற்காக ஆயத்தமாக இருக்கும். அப்பொழுது "***சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டதற்கு வழிநடத்தப்படுவார்கள்***" (ஆகாய் 2 : 7).

***

Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*

**Bro. V. Vincent Jeyakumar**

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY